

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. விராலிமலை சட்டமன்ற தொகுதி சார்பில் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் , வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், ஒன்றிய செயலாளர்கள் அ.இளங்குமரன், முபிம. சத்தியசீலன், கே.பி.அய்யப்பன் ஆகியோர் வரவேற்பில் விராலிமலை பட்டமரத்தான் கோவில் திடலில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களும் அதனால் தமிழ்நாட்டு மக்களும் தமிழ்நாடும் அடைந்து வரும் வளர்ச்சி பற்றியும் மக்களிடம் எடுத்துரைத்து எழுச்சியுரையாற்றினார். விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் தஞ்சாவூர் துணை மேயருமான டாக்டர் அஞ்சுகம் பூபதி, கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வில் த.சந்திரசேகரன், மு.பி.மணி, கே.ஆர்.என்.போஸ், கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம். பழனியப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, எம்.கோவிந்தராஜன், ஓ.எஸ்.வெங்கடாசலம், வை.விஜயக்குமார், எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, டி. செல்வம் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய வட்ட கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் அடிக்கல் நாட்டினார்! ரூ.18,10 கோடியில்

# கொளக்காநத்தம் அரசு கலை - அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பணிகளை தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர்,பிப். 24 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக, பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொளக்காநத்தம் அரசு கலை அறிவியல் கல்லூரிக்கு ரூ.18.10 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி ஆகியோர் நேரலையில் பார்வையிட்டு, கொளக்காநத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இனிப்புகளை வழங்கி பணிகளை தொடங்கி வைத்தனர்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொளக்காநத்தம் பகுதியில் உள்ள மாணவ, மாணவியர்கள் மேல்நிலைக் கல்வி முடித்துவிட்டு கல்லூரி பயில திருச்சி, பெரம்பலூர், அரியலூர் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் சூழலை தவிர்க்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளக்காநத்தத்தில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அறிவித்து தொடங்கி வைத்தார்கள்.

கொளக்காநத்தம் அரசு கலை அறிவியல் கல்லூரி தற்காலிகமாக கொளக்காநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தொடங்கப்பட்ட அன்றே, சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர்ஃ ரூ.1 கோடி வழங்கி, கல்லூரிக்கான கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

தற்போது கல்லூரிக்கான அனைத்து கட்டடங்களையும் முழுவதுமாக கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.18.10 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கி, இன்று கல்லூரி கட்டடம் கட்டும் பணிகளுக்கு காணொளிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள்.

தரைத்தளத்தில் இரண்டு வகுப்பறை, அலுவலக அறை, பதிவேடு அறை, முதல்வர் அறை, துறைத்தலைவர்கள் அறை, வேதியியல் ஆய்வகம், நூலகம், தேர்வுக்குழு அறை மற்றும் கழிவறைகளும், முதல் தளத்தில் வகுப்பறைகள், ஆய்வகங்களும், இரண்டாம் தளத்தில் , வகுப்பறைகள், கணினி ஆய்வகம், கருத்தரங்கு கூடம் மற்றும் கழிவறைகளும் கட்டப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில், முன்னாள் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் பி.சிந்தனைசெல்வி, குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை, கல்லூரி முதல்வர் கண்ணதாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் டி.சி.பாஸ்கர், அ.கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வ.சுப்ர மணியன், முன்னாள் ஊரட்சி மன்றத் தலைவர் என்.ராகவன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், ரூ.10:32 கோடி செலவில் முடிவுற்ற குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் 21.02.2026 அன்று திறந்து வைத்தார். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கோ.துவாரகநாத் சிங் , கே.எஸ்.சந்திரன், தென்ன லூர் எம்.பழனியப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, எம்.கோவிந்தராஜ், எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, அ.பிரபா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### ஈரோடு தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளர்

# ப.க.பழனிச்சாமி இல்லத் திருமண வரவேற்பு விழா!

## தலைமை சு.முத்துசாமி - முன்னிலை கே.இ.பிரகாஷ்!

ஈரோடு, பிப். 24 - கழகத் தலைவரும் தமிழ்நாடு முதல மைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக பொருளாளரும், 24வது வட்ட மாமன்ற உறுப்பினரும், 1வது மண்டல தலைவரும் ஈரோடு மாநகராட்சி ஆலோசனை குழு உறுப்பினருமான சேலம் ரயில்வே கோட்டம். ப.க.பழனிச்சாமி - ராஜலட்சுமி ஆகியோரின் மகன் ப.க.ப.கோபிநாத், விஜயகுமார் - இந்திரா ஆகியோரின் மகள் வி. திவ்யா ஆகியோரின் திருமண வரவேற்பு நாளை (25.2.2026 -புதன் கிழமை) மதியம் 11.30க்கு மணிக்கு மேல் 2.30.மணிக்குள் ஈரோடு பிராமண பெரிய அக்ரஹாரம் ரவி மஹாலில் மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத்திருமண வரவேற்பு விழாவில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆன்றோர் சான்றோர்கள், அனைத்து கட்சி பிரமு கர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.

# கரூர் அருகே முருங்கை பவுடர் உற்பத்தி தொழிற்சாலை!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், பிப். 24 - 40 ஆண்டுகால விவசாயிகளின் கோரிக்கை திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேறியது என கரூர் அருகே முருங்கை பவுடர் தொழிற்சாலையில் உற்பத்தியை தொடங்கி வைத்து வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேசினார்.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக, அரசு மானியத்துடன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் வகையில் முருங்கை மதிப்பு கூட்டப்பட்ட செயலாக்க மையம் கிருஷ்ணராயபுரம் அருகே உள்ள மேட்டு மகாதானபுரத்தில் முதன்முறையாக விவசாய உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், தொழில் முனைவோர்கள் இணைந்து தமிழ்நாடு அரசு மானியத்துடன் உருவாக்கியுள்ளனர். முருங்கை பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டல் வசதி சேர்க்கை செயலாக்க மையத்தை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி திறந்து வைத்தார்.

**அரவக்குறிச்சியில் முருங்கை பார்க்!**

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் 6.5 ஏக்கரில் ரூ 15 கோடி மதிப்பீட்டில் முருங்கை பூங்கா மற்றும் வாரியம் அமைக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். இதனை அடுத்து முருங்கை பார்க் அமைக்க தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் கரூர் ஏற்றுமதியாளர்கள், வேளாண் உற்பத்தியாளர்கள், தொழில் முனைவோர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் கரூர் மாவட்டத்தில் 6000 ஹெக்டேர் பரப்பளவில் நாள் ஒன்றுக்கு 450 மெட்ரிக் டன் என்கிற உற்பத்தியை 1200 டன் அளவிற்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, இப்போது கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் உள்ள மேட்டு மகாதானபுரத்தில் முதற்கட்டமாக முருங்கை மதிப்பு சேர்க்கை செயலாக்க மையம் உற்பத்தியை தொடங்கியுள்ளது.

மேலும் இதன்மூலமாக முருங்கை இலையிலிருந்து பிஸ்கட், தேன், வெண்ணெய், நூடுல்ஸ், பொடி, சூப் உள்ளிட்ட பொருட்கள் தயாரிக்கப்பட்டு முதற்கட்டமாக ரூ. 1000 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முருங்கை பவுடர் உற்பத்தியை தொடங்கி வைத்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:

கரூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் முருங்கைக்கு போதிய விலை கிடைக்கவில்லை என விவசாய பெருமக்கள் தங்களுடைய கோரிக்கைகளை கடந்த 40 ஆண்டு காலமாக முன்வைத்து தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். மேலும் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் முருங்கை பவுடர் தொழிற்சாலையை கொண்டு வருவேன் என தொடர்ந்து வாக்குறுதிகளை அளித்து வந்தார்கள். ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றி மகத்தான சாதனை படைத்தவர் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மேலும் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் முதலமைச்சர் அவர்கள் முருங்கை உற்பத்தி பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டு அதற்கான அனுமதிகளை வழங்கி பணிகள் தொடங்கப்பட்டு தற்பொழுது முதல் கட்டமாக மேட்டுமகாதானபுரத்தில் 25 தொழில் முனைவோர்கள் இணைந்து இந்த மையத்தை அரசு உதவியுடன் தொடங்கியுள்ளனர்.

மேலும், அரவக்குறிச்சி பகுதியில் முருங்கை பார்க் அமைக்க 6 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அதற்கான பணிகள் விரைவாக தொடங்க இருக்கின்றோம். தமிழ்நாட்டில் முதல்முறையாக 25 பேர் கொண்ட குழு அதற்கான அமைப்பை உருவாக்கி அரசின் மூலமாக மானிய நிதிகளை பெற்று தங்களுடைய முதலீடுகளையும் சேர்த்து முருங்கை உற்பத்திக்காக ஒரு வித்தியாசமான செயல்திட்டத்தை கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தியுள்ளனர்.

முதலமைச்சர் அவர்களுடைய இந்த ஒரு மகத்தான திட்டம் என்பது, கரூர் மாவட்டத்தில் அனைத்து துறை உற்பத்திக்கான இலக்கு 2030க்குள் 50 ஆயிரம் கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் முருங்கைக்கான உற்பத்திக்கான இலக்கும் மிகப் பெரிய ஒரு சாதனையாக, துணையாக அமையும்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

முன்னதாக இத்திட்டத்திற்கு, அரசு மானியம் வழங்கி ஊக்குவிப்பதற்கு ஏற்றுமதி தொழில் முனைவோர் மற்றும் வேளாண் உற்பத்தியாளர்கள் அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர். இந்திய தொழில் கூட்டமைப்பு கரூர் மாவட்டம் முன்னாள் தலைவர் வெங்கடேசன், முருங்கை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கோடந்தூர் பழனிவேல், கரூர் மாநகராட்சி துணை மேயர் தாரணி சரவணன், ஒன்றிய திமுக செயலாளர் ரவிராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குமரிக்கு வருகை தரும் முதல்வர்: மீனவர் நலன் நாடும் புதிய திட்டங்களும் துவக்கம்!

## மீனவர்கள் பெருந்திரளாக பங்கேற்க கழக மீனவர் அணி செயலாளர், நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் அழைப்பு!



குமரி, பிப். 24 - கழக மீனவர் அணி செயலாளர் - தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டா லின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது, திராவிட மாடல் நல்லாட்சியின் மூலம் ஒட்டு மொத்த தமிழகத்தின் வளர்ச்சியிலும் அசுர பாய்ச்சல் நிகழ்த்தியிருக்கும் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் குமரி மாவட்ட த்திற்கு வரும் 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் வருகை தர உள்ளார்.

ஏற்கனவே கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் குமரி மாவட்டத்தில் மீன்வளத் துறைக்கு 1000 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு திட்டங்களாக வந்துள்ளன. மீனவ கிராமங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துக் வகையில் தூண்டில் வளைவுகள், கடலரிப்பு தடுப்புச் சுவர், பேரிடர் கால தொலைதொடர்பு கருவிகள் போன்றவற்றிற்கு அதிக நிதி கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டு, மீனவர்களின் பாதுகாப்பான வாழ்வியல் உத்தரவாதப்படுத்தப்பட்டு உள்ளது. இதேபோல் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கியது, மீன்பிடி குறைகால நிவாரணத் தொகையை உயர்த்தியது என ஏராளமான மீனவர் நலன் நாடும் திட்டங்க ளைத் தந்தவர் நம் முதல்வர் அவர்கள். அந்தவகையில் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் இப்போது குமரி மாவட்டத்திற்கு வரும்போதும் வாணியக்குடி மீனவ கிராமத்தில், புதிய மீன்பிடித் துறைமுகம் கட்ட முதல்கட்டமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகளை துவக்கி வைக்க உள்ளார். இதேபோல், குளச்சல் துறைமுக விரிவாக்கப் பணிகளுக்கு முதல்கட்டமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகளையும் தொடக்கி வைக்க உள்ளார்.

குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீனவர்கள் 350 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது உட்பட ஏராளமான மீனவர் நலன் நாடும் திட்டங்களை குமரிமாவட்ட மீனவ மக்களுக்கு தந்து, அவற்றைத் தொடக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொள்ளும் இந்த அரசு நிகழ்ச்சிகளில் கழக மீனவர் அணி நிர்வாகிகள், மீனவர் நலவாரிய உறுப்பினர்கள், மீனவ மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும்.”இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவெறும்பூர் அருகே உள்ள பழங்குனங்குடியில் புதிய கட்டளை மேட்டு வாய்க்காலில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2025 – 2026 ஆம் நிதி ஆண்டில் ரூ1.50 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டுவதற்கான அடிக்கல்லை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நாட்டினார். இந்த விழாவில் கவிஞர் சல்மா எம்.பி, திருச்சி டி.ஆர்.ஓ பாலாஜி,உதவி செயற்பொறியாளர் ரேக்கா, செயற்பொறியாளர் நித்தியானந்தம், உதவி பொறியாளர் வினோத், திருவெறும்பூர் தாசில்தார் தனலட்சுமி. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்தகுமார், அண்ணாதுரை, திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன். கழக நிர்வாகிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதுார் மகாதான வீதியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சமூக நீதி கல்லூரி மாணவர் விடுதியினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் நேற்று முன்தினம் (22.02.2026) திறந்து வைத்தார்கள். மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் , மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சுப.தமிழழகன், திருவிடைமருதுார் பேரூராட்சித்தலைவர் திருமதி.புனிதா மயில்வாகனன் அவர்கள், பேரூராட்சி துணைத்தலைவர் மயில்வாகனன், வட்டாட்சியர் திருமதி.சாந்தமீனா , அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.திருமதி.ஜெயசீலி , மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஸ்ரீதர், பேரூராட்சி செயலர் எம்.இராஜதுரை மற்றும் பலர் உடன் உள்ளனர்.